www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# பள்ளிக் கல்வித்துறை, பெரம்பலூர் மாவட்டம்

**முதல் இடைப்பருவத் தேர்வு - 2024**

**பத்தாம் வகுப்பு - மொழிப்பாடம் : தமிழ்**

**காலம்: 90 நிமிடங்கள்** **மொத்த மதிப்பெண்கள்: 50**

பகுதி - 1 8x1=8

**அ)** சரியான விடையைத் தேர்ந்தெடுத்து, குறியீட்டுடன் சேர்த்து எழுதவும்.

1. செய்யுளில் ஓசை குறையும் போது அதனை நிறைவு செய்ய மெய் எழுத்துகள் அளபெடுப்பது ----

அ) உயிரளபெடை ஆ) ஒற்றளபெடை இ) செய்யுளிசை அளபெடை ஈ) இன்னிசை அளபெடை

2. பாடுஇமிழ் பனிக்கடல் பருகி என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?

அ) கடல்நீர் ஒலித்தல் ஆ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல்

இ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல் ஈ) கடல்நீர் கொந்தளித்தல்

3. வட்டத்தொட்டி என்பது .....

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) உம்மைத்தொகை ஈ) வேற்றுமைத்தொகை

4. சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி என்னும் அடியில் ***பாக்கம்*** என்பது ............

அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

5. 'தமிழ்த்தென்றல்' என அழைக்கப்படுபவர் யார்?

அ) பாவாணர் ஆ) இளங்குமரனார் இ) திரு. வி. க. ஈ) சச்சிதானந்தன்

**ஆ ) பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்
மெத்த வணிகலமும் மேவலால் - நித்தம்
அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு
இணைகிடந்த தேதமிழ் ஈண்டு.

6. இப்பாடல் அடிகள் இடம்பெறும் நூல் எது?

அ) இரட்டுற மொழிதல் ஆ) தனிப்பாடல் திரட்டு இ) அன்னை மொழியே ஈ) சந்தப்பாடல்கள் திரட்டு

7. இப்பாடல் அடிகளில் இடம்பெறும் எதுகைச் சொற்கள் எவை?

அ) அணை, இணை ஆ) முத்தமிழ், முச்சங்கம் இ) மெத்த, மேவலால் ஈ) இணை, ஈண்டு.

8. ஆழி - இச்சொல்லின் பொருள்

அ) கப்பல் ஆ) ஈதல் இ) கடல் ஈ) முத்து

பகுதி - 2 பிரிவு - 1

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 3x2=6

(வினா எண் **12** -க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.)

9. மாஅல் - பொருளும் இலக்கணக் குறிப்பும் தருக.
10. 'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.
11. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.
12. 'அறிவு .....' என முடியும் திருக்குறளை எழுதுக.

www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

பிரிவு - 2 3x2=6

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு மட்டும் உரிய வகையில் விடையளிக்கவும்.

13. விடைகளுக்கு ஏற்ற வினாத் தொடர் அமைத்து எழுதுக.

அ ) எழில்முதல்வன், புதிய உரைநடை என்னும் நூலுக்காக சாகித்ய அகாதெமி பரிசு பெற்றார்.

ஆ) 'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள்.

14. அகராதியில் காண்க. அ) அண்ணம், ஆ) அன்னம்

15. கலைச்சொற்கள் தருக. அ) Whirlwind ஆ) Tempest

**16. வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.**

அ) கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறார். அவரை அழைத்து வாருங்கள்.

ஆ) ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.

பகுதி - 3 3x3=9

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.

வினா எண் **19** க்கு கட்டாயமாக விடையளிக்க.

17. சோலைக் (பூங்கா ) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வதாக ஓர் உரையாடலை அமைக்க.

18. முல்லை நிலத்திலிருந்தும் மருத நிலத்திலிருந்தும் கிடைக்கும் உணவுப் பொருள்கள் யாவை?

19. 'சிறுதாம்பு.....' எனத் தொடங்கும் நப்பூதனாரின் பாடலை அடிபிறழாமல் எழுதுக. (அல்லது)

'தென்னன்....' எனத் தொடங்கும் பாவலரேறுவின் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

20. வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்

கோலொடு நின்றான் இரவு - இக்குறட்பாவிற்கு அலகிட்டு வாய்பாடு தருக.

பகுதி - 4 1x5=5

21. உமது ஊருக்கு கிளை நூலக வசதி அமைத்துத் தருமாறு நூலக ஆணையருக்குக் கூட்டு விண்ணப்பம் எழுதுக. (அல்லது)

மாநில அளவில் நடைபெற்ற '**மரம் இயற்கையின் வரம்**' என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்று முதல் பரிசு பெற்றத் தோழனை வாழ்த்தி, வாழ்த்து மடல் எழுதுக.

பகுதி - 5

விரிவான விடையளிக்கவும். 2x8=16

22. தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக. (அல்லது)

முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

23. '**சான்றோர் வளர்த்த தமிழ்**' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக. (அல்லது)

அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப் பாட்டினைக் 'கோபல்லபுரத்து மக்கள்' கதைப் பகுதியைக் கொண்டு விவரிக்க.

www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com